மாவட்டத்தில் கோவை, ஈரோடு ஆகிய இரண்டு இடங்களில் சிறப்பங்காடி களில் இந்த எண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது. மற்ற இடங்களிலும் கிடைக்கிறது. இந்த எண்ணெயை இரண்டு விதமாக விற்கிறார்கள். தனி எண்ணெயாகவும் விற்பனை செய்கிறார்கள். நல்லெண்ணெயோடு—ஜிஞ்சலி ஆயில்—கலந்தும் விற்பனை செய்கிறார்கள், நல்லெண்ணெயை விட சூரியகாந்தி எண்ணெய் நல்லது. இருந்தாலும் கலப்படம் செய்வ தற்குக் காரணம் இதன் பலனை மக்கள் இன்னும் பூரணமாக உணர்ந்து கொள்ளவில்லை. அதன் தன்மையை மக்களுக்கு எடுத்து விளக்கினால் மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஒய்வு ஊதியம்.

*680 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றி விட்டு, 1969 ஜூன் முதல் 1972 மே மாதம் வரை ஒய்வுபெற்ற பல ஆசிரியர்களுக்கு, 1973 நவம்பர் வரை ஒய்வு ஊதியமும், சேமநல வைப்பு நிதியும் வழங்கப்படாமல் உள்ளதா ?

(இ) ஆம் எனில், காலதாமதம் ஆவதற்கு காரணம் யாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இந்த இடை நிலைக் காலத்தில் ஒய்வு பெற்ற ஒன்பது ஆசிரியர் களுக்கும் சேம நல வைப்பு நிதி வழங்கப்பட்டு விட்டது. அவர்களுள் எண்மருக்கு ஒய்வு ஊதியமும் வழங்கப்பட்டுவிட்டது.

(இ) ஒய்வு ஊதியம் இன்னும் கொடுக்கப்படாமல் விடுபட்ட ஒரு ஆசிரியர் ஒய்வு பெறுவதற்கு முன்பே சில விபரங்களைக் கொடுக்கும்படி அறிவுறுத்தியிருந்தும் அவர் இன்னமும் அளிக்கவில்லை. அவர் அவ் விபரங்களை அளித்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்தக் குறிப்பிட்ட ஆசிரியர் பல முறை ஒய்வூதிய மனு கொடுத்தும் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனிமேல் மனு கொடுத்தால் ஏற்றுக்கொண்டு உடனடியாக ஒய்வூதியத்தை வழங்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தக் குறிப்பிட்ட சூசை மேரி உடையார் என்ற ஆசிரியர் ஒய்வு பெற்றுச் சென்றதற்குப் பிறகு எங்கே தங்கியிருக்கிறார்கள் என்ற முகவரி கொடுக்கப்படாததாலும் பல வேறு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும் பதில் வாராததாலும் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அனுப்பாததால் தாமதம் ஏற்பட்டு விட்டது. இப்போது அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது விரைவில் அளிக்கப்படும்.